**Source:** Tamil Murasu, Page 2
**Date:** 27 May 2023

# புற்றுநோயாளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள சேவை

அனுஷா செல்வமணி

பொதுவாக புற்றுநோயாளிகள் சிகிச்சை மேற்கொண்ட பிறகு அவர்களின் எலும்புகள் பலவீனமாகும் நிலையில் அவர்களுக்கு 'ஸொலேட்ரோனிக் ஆசிட்' எனப்படும் மருந்து அளிக்கப்படுகிறது. இந்த மருந்து, புற்றுநோயாளிகளுக்கு நோய் பரவலைத் தவிர்க்கவும் எலும்புகளை வலுப்படுத்தவும் உதவும்.

இதற்கு முன்னர் நோயாளிகள் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகத்துக்குச் சென்றுதான் இந்த மருந்தைத் தங்களின் நரம்பு வழியாக ரத்தத்தினுள் செலுத்த வேண்டியிருந்தது. கழகத்திலிருந்து தொலைவில் வசிக்கும் நோயாளிகளுக்கு இனி அந்தக் கவலை வேண்டாம்.

புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில், மருத்துவர்களும் தாதியரும் நோயாளிகளின் புற்றுநோய் தீவிரத்தை அறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சையை அளிக்க முற்பட்டு வருகின்றனர்.

இதையடுத்து, சிங்கப்பூரில் இருக்கும் இரண்டு முன்னணி புற்றுநோய் சிகிச்சை நிலையங்களில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகமும் ஒன்று.



தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகத்தின் தாதி ஒருவர், திருவாட்டி இஃபத் அரா நூர்ஜஹானுக்கு ஜூரோங் மருத்துவ நிலையத்தில் 'ஸொலேட்ரோனிக் ஆசிட்' மருந்தைச் செலுத்துகிறார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

2017ஆம் ஆண்டில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகம், 'என்சிஐஎஸ் ஒன் தி கோ' எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தற்போது மேற்கு வட்டாரத்தில் இருக்கும் மூன்று மருந்தகங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் பயனாக நோயாளிகள் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகத்துக்கு அப்பாற்பட்டு, நேரத்தையும், செலவையும் மிச்சப்படுத்தும் விதத்தில் தங்கள் வீட்டுக்கு அருகிலேயே இருக்கும் மருந்தகத்திலேயே சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

திட்டத்தின்கீழ் செயல்படும் ஜூரோங் மருத்துவ நிலையத்தில் தொடங்கி, இனி நோயாளிகள் கியட் ஹொங் ஒருங்கிணைந்த தனியார் பொது மருந்தகத்திலும் கிளமெண்டியில் உள்ள ஃபிரண்டியர் ஒருங்கிணைந்த தனியார் பொது மருந்தகத்திலும் இனி இந்த சேவையைப் பெறலாம்.

19 புற்றுநோய் சிகிச்சைகள், மூன்று மருத்துவ நடைமுறைகள், 49 ரத்தப் பரிசோதனைகள் ஆகியவை இந்தத் திட்டம் மூலம் புற்றுநோயாளிகளுக்கு மருந்தகங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

சேவை மூலம் பயன் கண்ட நோயாளிகளில் ஒருவரான 57 வயது இஃபத் அரா நூர்ஜஹான், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் கட்ட மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார்.

மீண்டும் புற்றுநோய் அவரைத் தாக்காமல் இருக்க இவர் சிகிச்சைப் பெற்று வருகிறார். தனது எலும்புகளை வலுப்படுத்துவதற்கு இஃபத், 'ஸொலேட்ரோனிக் ஆசிட்' மருந்தை முன்பு சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகத்துக்குச் சென்று எடுக்க வேண்டியதாக இருந்தது.

கூ டெக் புவாட் மருத்துவமனையில் மொழிபெயர்ப்பாளராக பணிபுரியும் இவர், "நான் உட்லண்ட்ஸ் வட்டாரத்தில் வசிக்கிறேன். இதற்கு முன்பு சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகத்துக்குச் செல்ல நான் ஒரு மணி நேரமாவது பயணம் செய்ய வேண்டும். இப்பொழுது ஜூரோங் மருத்துவ நிலையத்திற்கு வருகிறேன். இங்கு நான் காத்திருக்கத் தேவையில்லை. இந்தச் சேவை இதா இரண்டு மருந்தகங்களுக்கு விரிவாக்கம் செய்யப்படுவதால் எனக்கு வசதியாக உள்ளது." என்றார்.

sanush@sph.com.sg

## புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய தெரிவு

புற்றுநோய் சிகிச்சைக்கு ஒரு புதிய தெரிவு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக மனிதனின் ஆரோக்கியத்தைப் பாதித்து வரும் அடையாளத்தைப் பெற்ற இந்தக் கொடிய நோய்க்கு உலகளவில் இன்னும் ஒரு தீர்வு கிடைக்கவில்லை.

கீமோதெரபி அல்லது கதிர்வீச்சு சிகிச்சையை மட்டும் நம்பி வாழும் நோயாளிகள் இதனால் தாக்குப்பிடிக்க முடியாத அளவிலான பக்கவிளைவுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இதற்கு அப்பாற்பட்டு புதிதாக இம்முனோதெரபி எனும் நோய் எதிர்ப்பு சிகிச்சை முறை அண்மையில் உதயமானது. நோயாளியின் நோய் எதிர்ப்பு ஆற்றலைச் சார்ந்து உடலில் இருக்கும் புற்றுநோய் அணுக்களின் நிலை குலைக்கப்படும்.

புதிய உச்சத்தை எட்டி வரும் மருத்துவ சிகிச்சை முறைகளில் அணுக்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் சிகிச்சை முறை நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. வலி தாங்கும் பாரமும் நோயாளிக்கு இதனால் குறையும். அவ்வாறு இந்த சிகிச்சை முறையைச் சோதிக்கும் விதமாக சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் நிலையம் 'டி–செல் தெரபி' எனும் சிகிச்சை முறையை வெள்ளோட்டம் செய்யவுள்ளது.

இந்த சிகிச்சை முறையில், நோயாளியின் ரத்த அணுக்கள் சேகரிக்கப்பட்ட பின் ஆய்வுகூடத்தில் அவை மாற்றியமைக்கப்படும். மாற்றியமைக்கப்பட்ட அணுக்கள் புற்றுநோய் அணுக்களை அழிக்கும் நோக்கில் நோயாளியின் உடலுக்குள் மீண்டும் செலுத்தப்படும்.

வழக்கமாக கீமோதெரபியில் ஆரோக்கியமான அணுக்களும் அழிக்கப்படுகின்றன. ஆனால் இந்த மாற்றியமைக்கப்பட்ட அணுக்கள் வெறும் புற்றுநோய் அணுக்களை அழிக்கும் ஆற்றல் கொண்டவை என நம்பப்படுகிறது.

வெள்ளோட்டத்தின் தலைமை புலனாய்வாளரான டாக்டர் ராகவ் சுந்தர், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகத்தின் குருதியியல், புற்றுநோயியல் பிரிவில் நிபுணராக உள்ளார்.



டாக்டர் ராகவ் சுந்தர் (இடமிருந்து 2வது). **படம்: தேசியப் பல்கலைக்கழகப் புற்றுநோய் கழகம்**

சிகிச்சை பற்றி விளக்கமளித்த அவர், இந்த சிகிச்சை, ரத்த புற்றுநோய்க்கு நல்ல பலனைத் தந்ததால் பிற வகையான புற்றுநோய்களுக்கும் அதை வெற்றிகரமாகப் பயன்படுத்தலாம் என நம்பிக்கை தெரிவித்தார்.

சென்ற மாதம் தொடங்கிய இந்த வெள்ளோட்டம் இரண்டு கட்டங்களில் நடைபெறும். முதலில் ஆரோக்கியமான ரத்த கொடையாளர்களிடமிருந்து ரத்தம் பெறப்படும். கிடைத்த ரத்தத்திலிருந்து நோயெதிர்ப்பு அணுக்கள் அகற்றப்படும்.

இரண்டாவது கட்டத்தில், நுரையீரல், பெருங்குடல், கல்லீரல், கருப்பை புற்றுநோய்களால் முற்றிய நிலையில் பாதிப்படைந்த 21 வயதுக்கும் மேற்பட்ட நோயாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

குறைந்த அளவில் கீமோதெரபி பெற்றுக்கொண்டவுடன் ஒவ்வோர் வாரமும் ஆரோக்கியமான கொடையாளரிடமிருந்து பெறப்பட்ட நோயெதிர்ப்பு அணுக்கள் அவர்களுக்கு ஏற்றப்படும்.

20க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், ஊழியர்களின் நெருக்கமான கண்காணிப்பில் இந்த நோயாளிகள் கவனிக்கப்படுவார்கள்.

சிகிச்சையின் பக்க விளைவுகளைப் பற்றி விளக்கிய டாக்டர் ராகவ், நோயாளிகளுக்குத் தொற்று ஏற்படுவதற்கும் நரம்பியல் ரீதியான பக்க விளைவுகள் வருவதற்கும் வாய்ப்புகள் அதிகம் என்றார்.

**கூடுதல் செய்தி: அனுஷா செல்வமணி**

Source: Tamil Murasu © SPH Media Ltd.
Permission required for reproduction